IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 107 of 2017

சாட்சி : PW2

பெயர் : செல்வராஜ் தேதி: 18-02-2025

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் படிக்க தெரியும். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு சம்மன் எதுவும் வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். நான் தறி வேலை செய்து வருகிறேன். நான் 1980 வருடம் நான் பிறந்தேன். 1987-95 வருடங்களில் தாவா சொத்துக்கள் வாதி பெயரில் வாங்கப்பட்டது என்றால் ஆமாம். அப்போது எனக்கு ஏழு வயது என்றால் ஆமாம். மூன்று சகோததர்கள் மூன்று சகோதிரிகள் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் 1981 ஆம் வருடம் இறந்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு எந்தெந்த சர்வே எண்களில் நிலம் உள்ளது என்று குறிப்பாக எனக்கு தெரியாது. கருக்கல்வாடி கிராமத்தில் நிலம் உள்ளது. மேற்படி சொத்துக்களை கயிறு விற்றுதான் வாதி சொத்துக்களை வாங்கினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனக்கு ஏழு வயது என்பதால் அது பற்றி கூற இயலாது என்றால் சரியல்ல. கருக்கால் வாடி சொத்தை விற்று தாவா சொத்துக்களை வாங்கியதாக வாதி சொல்லிவிட்டு, நான் கூறிகிறேன் என்றால் சரியல்ல. வாதி என்னிடம் சொல்லி சொத்தை விற்க சொன்னார் என்று நான் பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. கருக்கல் வாடி சொத்து மேட்டுகாடு கரடு நிலம் என்றால் ஆமாம். மேற்படி சொத்தை விற்பதற்கு செல்முத்துவிற்கு ஆறு நபர்கள் சேர்ந்து பவர் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். மேற்படி நிலங்களை வீட்டு மனைகளாக பிரிப்பதற்கு சம்மன் செய்து நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்றால்

ஆமாம். சாலை அமைத்தார்கள். சாக்கடை வசதி செய்யவில்லை. பூங்காவிற்கு நிலம் எதுவும் ஒதுக்கப்படவில்லை. கடைகளுக்கு நிலம் ஒதுக்கவில்லை. செல்லமுத்து அனுமதி வாங்கினார். அதன் பிறகு வீட்டுமனைகள் விற்பனை செய்தார்கள் என்றால் ஆமாம். ஆறு முதல் பத்து மாதங்கள் அதற்காக ஆனது என்றால் சரியல்ல. ஐந்தரை ஏக்கர் மனை பிரிவிற்கு ஒதுக்கினார்கள். 10 மாதங்களாக மனை பிரிவு செய்வதற்கு காலம் எடுத்துக்கொண்டார்கள். மனை பிரிவுகள் பிரித்த பிறகு மொத்தமாக எவ்வளவு சதுர அடி வரும் என்று தெரியும். வா.தா.ச.7 பக்கம் 5 ல் விலை பேசிய பிறகு கிரைய ஒப்பந்தம் கண்டு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுக்கவும் அதற்கான ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பத்து மாதங்கள் கழித்து விற்பனை ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். அதற்கான தொகையை விற்பனை செய்ய செய்ய செல்லமுத்து வாங்கிகொண்டார் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.7 ல் பணம் கொடுக்கப்பட்டதாக எழுதப்படவில்லை என்றால் ஆமாம். உண்மையை மறைத்து வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நெடுங்குளம் கிராமத்தில் ஆறு ஏக்கர் வாங்கினார்கள். அந்த நிலத்தில் யார் சுவாதினத்தில் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்காக நான் அவ்வாறு கூறிகிறேன் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி அவருடைய சொந்த பணத்தை வைத்து நிலத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. அவர் பெயரில் தான் வருவாய் துறை ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/−A.M. ரவி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
சேலம்.